(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(10).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 மாச்சு 01 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.174/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ புத்திக பதிரண

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ஏ. டி. சம்பிக பிரேமதாச

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சர் கௌரவ டிலான் பெரேரா அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

பராயமடையாத இலங்கை வீட்டுப்பணிப்பெண்ணான ரிசானா நபீக், எந்தவகையிலும் அவர் பொறுப்புக்கூறத் தேவையில்லாத குற்றச் செயலொன்று தொடர்பாக சுருக்க முறையான வழங்குத் தீர்ப்பின் பின்னர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதை தற்போது சகலரும் அறிவார்கள் என்பதனாலும்;

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ டிலான் பெரேராவின் விடயப்பரப்பின் கீழ் வருகின்ற இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முற்றாக ரிசானா நபீக்கிற்கு எவ்வகையிலும் அர்த்தமுள்ளதொரு உதவியை பெற்றுக் கொடுக்கத் தவறியதுடன், அதன் பெறுபேறாக அவர் துரதிஷ்டவசமாக அகால மரணத்தை தழுவ வேண்டி நேரிட்டதையும் சகலரும் அறிவார்கள் என்பதனாலும்;

அமைச்சர் இந்த விடயத்தை முற்றாக தவறான முறையில் முகாமைத்துவம் செய்து, இதன் தவறுகளை உண்மையாக அவர் நேரடியாகவே ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளதொரு சந்தர்ப்பத்தில், வெறுமனே சவூதி அரசின் மீது குற்றம் சுமத்துகின்ற அர்த்தமற்றதொரு முயற்சியில் ஈடுபட்டு கருத்துக்களை வெளியிடுவதில் மாத்திரம் தங்கியிருந்தமை தெளிவானதொரு விடயமாகும் என்பதனாலும்;

எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ டிலான் பெரேரா தொடர்ந்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சராக செயற்படுவதற்குள்ள ஆற்றல் தொடர்பில் நம்பிக்கை இல்லையென இச் சபை தீர்மானிக்கின்றது.